பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி மீ 07 உ செவ்வாய்க்கிழமை (23 07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 231

## ஞாயிறு இரவுத் தாக்குதலில் 50 க்கும் மேல் படையினர் பலி!

### 33 சிப்பாய்களின் சடலங்களைப் புலிகள் மீட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிப் பின்னர் விடுதலைப் புலிகளின் சுற்றிவளைப்பில் சிக்கிக்கொண்ட இராணுவ அணியில் 50 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்! நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்!! உயிரிழந்த படையினரில் 33 பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள் மீட்டு எடுத்தனர்.

புலிகளின் சுற்றிவளைப்பில் சிக்கிய படை அணி, புலிகளின் தாக்குதலில் சின்னாபின்னமாகியது.

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கி, ஆனையிறவு நோக்கி நகர்ந்து சென்று கொண்டிருந்த படையினர் மீது ஞாயிறு மாலை விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தியதும் —

அந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் சிதறிப் பிரிய, படை அணி ஒன்று புலிகள் வசம் சிக்கிக் கொண்டதும் தெரிந்தவையே.

இந்தப் படை அணி மீது ஞாயிறு இரவிரவாக விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர்.

இரவு நடந்த இத்தாக்குதலிலேயே ஐம்பதுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன. [உ-3-5]

## படையினரின் சடலங்கள் இன்று மக்கள் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெற்றிலைக்கேணிக்கு அருகே நேற்று முன்தினம் புலிகளினால் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலின் பின்னர் கைப்பற்றப்பட்ட 33 படையினரின் சடலங்களும், ஆயுதங்களும் இன்று நல்லூர் முத்திரைச் சந்தியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன, (ஒ-3-5)

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெற்றிலைக்கேணி அருகே ஞாயிறு இரவு புலிகள் சுற்றிவளைத்து நடத்திய அதிரடித் தாக்குதலின்போது ஏராளமான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

அவை வருமாறு:-

★ ரி 56 ரக எல். எம். ஜி. — 3
★ 40 எம். எம். ரக கிரனேட் பிஸ்டல் — 3

[2 ஆம் பக்கம் பார்க்க]

# படையினரின் 36 சடலங்கள் இன்று கையளிக்கப்படலாம்

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் பொறுப்பேற்று ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் ஒப்படைப்பர்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதிக்கு அருகே கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற சண்டைகளின்போது விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்ட படையினரின் 36 சடலங்கள், ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைக்கப்படுவதற்காக, இன்றுசெஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் இந்தச் சடலங்களைப் பொறுப்பேற்று, பருத்தித்துறைக் கடற்பகுதியில் வைத்து, ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் அவற்றை ஒப்படைப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சனியன்று இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவரின் சடலத்தையும்—

நேற்று முன்தினம் காலையில் மற்றும் இரு சிப்பாய்களின் சடலங்களையும்—

நேற்று முன்தினம் இரவு நடந்த உக்கிர மோதலில் 33 சிப்பாய்களின் சடலங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தனர்.

இந்தச் சடலங்கள் இன்று நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் செஞ்சிலுவைப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகி

[4ஆம் பக்கம் பார்க்க]

## 28 வேங்கைகள் களப்பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெற்றிலைக்கேணி அருகே ஞாயிறு இரவு நடந்த அதிரடித் தாக்குதலில் 28 வீரவேங்கைகள் களப்பலியானார்கள்.

தாயக மீட்புப் போரில் வீரமரணம் அடைந்த இந்தப் போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

வீரமரணமடைந்த 28 போராளிகளில் 24 பேரின் பெயர், விவரங்கள் வருமாறு:

கில்பர்ட் [ஜோசப் ஜொனி - திருமலை], நளினி [மேகலா இரத்தினராஜா - உரும்பராய்], எடிசன் [முருத குமார் - திருமலை], அருள்ராஜ் [கந்தசாமி கலையமுதன் - திருமலை], சுடரோன் [நடராஜா ஜெகதீஸ்வரன் - தெல்லிப்பளை], லோலோ தில்லைநாதன் முரளிதரன் - புன்னாலைக்கட்டுவன்.]

அன்புதாஸ் [மாணிக்கம் துஷ்யந்தன் - திருமலை], கிஷோர் [தியாகராஜா கிருபாகரன் - தெல்லிப்பளை], நிலர்ந்தன் [இராசதுரை நந்தகுமார் - உரும்பராய்],

[2 ஆம் பக்கம் பார்க்க]

## முள்ளியானில் நேற்றும் கவச வாகனம் தகர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெற்றிலைக்கேணிக்கு அருகே முள்ளியானில் நிலைகொண்டிருந்த படையினர் மீது நேற்றுக் காலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் படையினரின் சலாடின் கவச வாகனம் ஒன்று முற்றாகத் தகர்க்கப்பட்டது. பல படையினர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## உங்கள் கவனத்துக்கு!

இன்றைய உதயனில் வெளியாகியுள்ள செய்திகள் சில நேற்றைய விசேட பதிப்பில் இடம்பெற்றவை என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

## படை முன்னேற முடியாத நிலை!

### ராணுவ அதிகாரி ஒப்புக்கொள்கிறார்

கொழும்பு, ஜூலை 23

ஆனையிறவு இராணுவ முகாமை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவத்தின் இரண்டு படையணிகளாலும் முன்னேறவே முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என இந்திய வானொலி அறிவித்தது.

அப் பகுதியில் பலமாக நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் ஆக்ரோஷத் தாக்குதல்கள் காரணமாகவே அரசுப் படையணிகளால் முன்னேற முடியாமல் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## இராணுவ காவல் அரண் மீது புல்லாவெளியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெற்றிலைக்கேணிக்கு அருகே புல்லாவெளியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரின் காவல் அரண்கள் மீது நேற்று மாலை 5-15 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ-3)

## நேற்று நள்ளிரவு வரை கடும் விமானக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆனையிறவுப் பகுதிகளில் நேற்று நண்பகல் முதல் நள்ளிரவு வரை தொடர்ந்து விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நண்பகல் ஒரு மணி முதல் சீனச் சகடை விமானம், அவ்ரோ, பொம்மர் [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் படையினரின் 5 காவல் அரண்கள் தகர்ப்பு

### 8 சிப்பாய்கள் பலி; பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

வவுனியாவில் சூடுவெந்தபுலம் — சின்னக்குஞ்சுக் குளம் இராணுவ காவல் அரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் [illegible]

இந்தத் தாக்குதலில் ஐந்து இராணுவச் காவல் அரண்கள் விடுதலைப் புலிகளால் அழித்து நாசமாக்கப்பட்டன. எட்டு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அங்கிருந்து பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கருவேப்பங்குளம் பக்கமாகவுள்ள இந்த தொடர் காவல் அரண்கள் மீது தாக்குதல் நடந்து கொண்டிருந்த சமயம், பிரதான முகாமில் இருந்து உதவிக்கு வந்த படையினர் மீதும் விடுதலைப் புலி

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் இராமதாஸ் FRCP, DCH [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம்- வெளியீடு: உதயன் வெளியீட்டகம். விற்பனை: மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம், நல்லூர்.

## தவறிவிட்டது

சின்னையா புஸ்பராசா ஆகிய எனது அடையாள அட்டை (692780280 V) 02-07-91 இல் பூநகரிக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

[17583]

நடராசா பரமேஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இலக்கம் 680152330 V), மற்றும் ஒரு தொகைப்பணம், ரசீதுகள், சிறிய திறப்புகள் அடங்கிய மணிபேர்ஸ் சுன்னாகத்திற்கும், கந்தரோடைக்கும் இடையில் 21 - 07 - 91 பகல் 1-00 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனையில் அல்லது யாழ். ஸ்ரான்லி வீதி 4/1, செல்லப்பா அன் கோவில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[17581]

## சோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், பருவத்தில் விவாகம் நடவாமை போன்ற பல துரதிர்ஷ்டங்கள் நீங்கி அதிர்ஷ்டமாக வாழ சாதகத்துடன் நேரில் வரவும். அதிர்ஷ்டம் இன்றேல் பணம் திரும்பப்பெற உத்தரவாதம் ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் 146, பருத்தித்துறை வீதி, (அரசடிச்சந்தி) நல்லூர்.

[17557]

## வெளிவந்துவிட்டது

உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கான வினாக் கொத்து விற்பனையாகின்றது. தொடர்புகளுக்கு நியூ சயன்ஸ் அக்கடமி கன்னாதிட்டி றோட், யாழ்நகர். ஆக்கியோன்: திரு. T. N. பஞ்சாட்சரம், விலை 50/-

[சி-0259]

## அறிவித்தல்

புளியங்கூடல் வேலணையில் இயங்கி வந்த எனது வைத்திய நிலையங்கள் தற்காலிகமாக மானிப்பாய் வீதியில் உள்ள 198/1, பொன்னப்பா ஒழுங்கையில் (ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில்] இயங்கி வருகின்றது. வைத்தியர் ச. சிவசம்பு.

(17530)

## யாருடைய மோதிரம்?

சில நாட்களுக்கு முன் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் தவறவிட்ட மோதிரத்தை ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். மினிபஸ் இல. 30 சிறி 5522 செ. கனகரத்தினம் புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி.

(4207)

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 26 — 10 — 1941 | 23 — 07 — 1990 |

## வல்லிபுரம் தியாகராசா

**திதி: 23 — 07 — 1991**

தன்னலம் கருதாது, பிறர் நலம் கருதி கோவில் தொண்டுகள் பல புரிந்து, விளையாட்டுக் கழகம், வாசிகசாலை ஆகியவற்றை அமைத்து, சமூக சேவை ஆற்றிய எமது இதயக் கோயிலின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.

பெரியவிளான்,
இளவாலை.

(17580)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | அரக்கர் பிடியில்: |
|---|---|
| 20 — 06 — 1969 | 23 — 07 — 1989 |

செல்வன்

## மகாலிங்கம் மகேஸ்வரன்

மாவீரன் நீயென்று மகேசா
தமிழ் ஈழம் போற்றுவதால் நாமிங்கே
சா உன்னை இளமையிலே அழைத்ததென்று
பட்ட துயர் அத்தனையும் பொறுத்தோம்
பூக் கொண்டு உன்னை அர்ச்சித்தோம்
அந்திக்குள் அப்பூவும் வாடிப் போகும்
பாக் கொண்டு உன் புகழை பாடினோம்
வா தவழ தமிழீழ மண்ணில் மீண்டும்!

-குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு.

(17527)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 07 — 06 — 1940 | 23 — 07 — 1985 |

திருமதி

## லூர்ட்ஸ் மார்கிறெட்றோஸ் தேவதாஸ்

(சறோஜினி)

ஆண்டாறு நீ சென்று முடிந்ததம்மா!
ஆனாலும் நின்வதனம் எங்கள் நெஞ்சில்
தூண்டாமணி விளக்காய்த் துலங்குதம்மா
தூயவளே லூர்ட்ஸ் மார்கிறெட்றோசே நாங்கள்
வேண்டாத வினைவிட்டு வந்துசேர
வேதமுறை தவறாது வேண்டிவாழ
மாண்டாலும் இயேசுபிரான் பதத்தைச்சேர
மறைஞான முறைமையதில் வாழவேண்டும்.

அன்புக் கணவன், பிள்ளைகள்
சகோதரர், உறவினர்கள்.

466/2 பி, யுவானியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[17577]

# 28 வேங்கைகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வரன் [சரவணமுத்து இரவிச்சந்திரன் - யாழ்ப்பாணம்], தேவா [அற்புதநாதன் குகதாஸ் - ஏழாலை]

பிலிப் [செஸ்ரியான் றெக்ஸ்ரன் — குருநகர்] ஆரமுது [தங்கவேல் விஜயகுமாரி- மட்டக்களப்பு], கோணேஸ் [மார்க்கண்டு தாமோதரம்பிள்ளை — புத்தூர்], குயின்டன் [சிங்கபாலவாசன் — குருநகர்], ஆனந்தன் [நேசா அமலதாஸ் — சுண்டுக்குளி], வேணு [கந்தசாமி பிரபா — மட்டக்களப்பு]

குயிலன் [துரைராசா சசிகரன் - வல்வெட்டித்துறை], ஆனந்த் [கிருஷ்ணபிள்ளை தவராசா - கரவெட்டி], விஷ்ணு [ஜோசப் செல்லையா தியாகு - வவுனியா], டொமினிக் [அருள் ஆனந்தராஜா - கிளிநொச்சி], தாசன் [முள்ளியவளை], வாசன். சுந்தரநாயகி. (ஒ)

# மீட்கப்பட்ட ஆயுதங்கள்.....

- ★ 40 எம். எம். ரக — ரி-69 ரக ஆர். பி. ஜி. — 2
- ★ 60 எம் எம். மோட்டார் — 3
- ★ ரி 56 ரக ரைபிள் — 25க்கு மேல்
- ★ ஏராளமான ஆர். பி. ஜி ஷெல்கள்
- ★ ஏராளமான மோட்டார் ஷெல்கள்
- ★ ஆயிரக்கணக்கான ரவைகள்

(ஒ)

# திருவழிபாட்டு ஓவியக் கண்காட்சி ஒத்திவைப்பு

ஜூலை 27 ஆம், 28 ஆம் திகதிகளில் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் (கதீற்றல் வீதி) நடைபெறவிருந்த ''திருவழிபாட்டு'' ஓவியக் கண்காட்சி தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது.

(17588) — அருள் திரு. ஜே. நீக்கிலஸ் —

# கலை வர்த்தக கல்லூரி
## C. C. A.

நிறுவனத்தில் கல்வி கற்கும் சகல 91, 92 மாணவர்களும் தவறாது 23-7-91 காலை 7-30 மணிக்கு நிறுவனத்திற்கு சமுகமளிக்கும்படி தயவாக கேட்டுக் கொள்கிறோம்.

(சி/0258) நிர்வாகி

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## கார்த்திகேசு சிவசிதம்பரம்

14-07-91 அன்று பலாலியில் இருந்து ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலால் அகால மரணமடைந்த சாவகச்சேரி நீதிமன்ற பிரதம லிகிதர் அமரர் கார்த்திகேசு சிவசிதம்பரம் அவர்களுக்கு எங்கள் இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலிகள்.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற
உத்தியோகத்தர்கள்

(சி/0304)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 — 06 — 1906 | 23 — 07 — 1988 |

அமரர்

## முத்தையா இராசையா

எம் அன்புத் தெய்வமே ஐயா!
எங்கள் வாழ்வின் ஒளிவிளக்காய்
எமது இல்லக் குலவிளக்காய்
எந்நாளும் எம்முடன் இணைந்திருக்கும்
எம் தந்தையே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
3 ஆண்டுகள் ஆகின்றன
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(4205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# திகதி தெரியாது

ஆனையிறவுப் போர் இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்? இந்தக் கேள்விக்கு விடை அறிய எல்லோருமே விரும்புகிறார்கள்.

ஆனையிறவு பிரதான முகாமில் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு ஆளாகி இருக்கும் 800க்கும் மேற்பட்ட சிப்பாய்களை மீட்பது மட்டும் ஸ்ரீலங்காப் படைகளின் நோக்கமல்ல. அந்த முகாமை விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து தம் வசம் வைத்திருக்க வேணடும் என்ற முடிவுடனேயே இத்தனை இராணுவத் "தடபுடல்"களும் நடக்கின்றன.

அதனை மனதில் இருத்தியே அரசாங்க மேலிடமும், இராணுவத் தலைமைப்பீடமும் செயலாற்றி வருகின்றன. இராணுவத்தின் பெரிய தலைகள் யுக்தப் பிராந்தியத்துக்கு அடிக்கடி வந்து போவதன் அர்த்தமும் அதுவே.

தமிழர் தரப்பைப் பொறுத்த மட்டிலோ, ஆனையிறவு வென்றாகப்பட வேண்டும். கைப்பற்றப்பட வேண்டும். அது பெரும் இராணுவ வெற்றியாக மட்டுமன்றி, அரசியல் வெற்றியாகவும் பரிணமிக்கவேண்டும் என்பதே தமிழர்களின் பெரு விருப்பம்.

ஸ்ரீலங்கா இராணுவத்துடன் நெருக்கமான தூரத்தில் நின்று, நேருக்கு நேர் களச் சமர் புரியும் அளவுக்கு தம் வசம் வல்லமை பொருந்திய தேசிய இராணுவம் ஒன்று உருவாகிவிட்டது என்பதையும்—

இந்தியாவும், ஏன் தமிழக அரசும் எதிரணிகளாக மாறி விட்ட போதிலும் தனது சொந்தக் காலில் நின்று உரிமைப் போராட்டம் நடத்தக் கூடிய அளவுக்கு, சுதந்திரம் என்ற தமது இலட்சியத்தில் இருந்து இம்மியும் நகராமல் மனஉறுதியுடன் நிற்கிறார்கள் என்பதையும் —

ஆனையிறவுப் போர் மூலம், ஸ்ரீலங்கா அரசுக்கு மட்டுமன்றி, அகில உலகத்துக்குமே தமிழர்கள் கடந்த 13 நாட்களில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதற்கும் மேலாக ஆனையிறவு இராணுவ முகாமை வீழ்த்துவதன் மூலம் தான் புதிய நிலைப்பாட்டை உறுதியாக்க முடியும். அந்த நோக்கில் தான் விடுதலைப் புலிகள் தமது போராட்டத் திறனையும் யுக்திகளையும் கையாண்டு வருகிறார்கள்.

நாளாந்தம் மீட்டர் கணக்கில் நகர்ந்து, வெற்றிலைக் கேணியிலிருந்து ஆனையிறவுக்கு முன்னேறி வருவதாகக் கூறும் இராணுவத்தினரை வழிமறித்து சுற்றிவளைத்தும், தாக்கியும் புறமுதுகிட்டு ஓடச் செய்த ஞாயிறு சம்பவம் போர் முனையில் ஒரு பெரும் திருப்பம்.

ஆனையிறவில் சிக்கியுள்ளவர்களை மீட்கவோ அல்லது அங்கு நிலைகொள்ளவோ ஸ்ரீலங்கா படைகள் நினைப்பது இலகுவில் சாத்தியமாகாது என்பதை இந்தத் திருப்பம் புகட்டுகிறது.

இதுபோல இன்னும் பல திருப்பங்களை ஏற்படுத்தி புதிய பாடங்களைப் புகட்ட வேண்டும் என்பது தமிழர் தரப்பின் இலக்கு.

ஆகையால் ஆனையிறவு யுத்தம் எப்போது முடியும் என்று குத்து மதிப்பீடாகவேனும் திகதி குறிப்பிடுவது மிகவும் கடினமாகும்.

## மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க (சோல்ட்) உறுப்பினர்கள் அனைவரையும், இன்று காலை எட்டுமணிக்கு முன்னர், யாழ். வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள பாலம் பணிமனையில் சமுகமளிக்குமாறு பொறுப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## இத்தாவிலில் சகடை குண்டு வீச்சு!

தென்மராட்சி, ஜூலை 23

பளை — இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் (ஞாயிறு) இரவு 10-45 மணியளவில் சீனச் சகடை விமானம் குண்டு வீசித் தாக்கியது.

தென்னம் தோட்டத்தில் குண்டு விழுந்து வெடித்ததால் பல தென்னை மரங்கள் முறிந்து நாசமாகின.

இதேவேளை—

வெற்றிலைக்கேணி வாய்க்கால் கரையோரமாக நேற்றுக்காலை 6 10 மணியளவில் சீனச் சகடை விமானம் ஆறு குண்டுகளைப் பொழிந்து தள்ளியது.

(ஓ-117)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். பல்கலைக்கழக நுண்கலைக் கழக மாணவர்களை இன்று காலை 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ)

## போதனைகள் மீண்டும் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் சகல போதனைகளும் மீண்டும் நாளை [புதன்] ஆரம்பமாகின்றன. வகுப்புகள் வழமைபோல் நடைபெறும்.

நேற்றுநடைபெற்ற விசேட கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது. (ஓ]

## நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், ஜூலை 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகையின் ஆடி மாத இதழ் நாளை வெளிவருகின்றது.

"ஆனையிறவு படைத்தளம் மீது ஒரு முற்றுகைப் போர்" என்ற தலைப்புக் கட்டுரை—

"சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணி" தோற்றம் பெற்றிருப்பது பற்றிய கட்டுரை—

ஆனையிறவுப் போரின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய ஆசிரிய தலையங்கம்—

தனியரசு அமைப்பதற்கு வலுவான பொருளாதார அடித்தளம் அவசியம் என வலியுறுத்தி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராஜா ஆற்றிய உரையின் தொகுப்பு—

ஆகியவை உட்பட பல முக்கிய அம்சங்கள் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

## மலையகத்தில் தேடுதல் தீவிரம்

மலையகத்தில் பொலீஸார் தமது தேடுதல் பணியை தீவிரமாக்கியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஹட்டன், பொகவந்தலாவ, நுவரெலியா, கினிகத்தேனை ஆகிய பகுதிகளில் பொலீஸார் அண்மையில் வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர். [இ-எ]

## ஆலோசனை கூட்டம்

முறைசாரர்க் கல்விப் பிரிவில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான விசேட ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் (வியாழன்) காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

முறைசார்ராக் கல்வி சகல பாடநெறிகளிலும் பயிற்சி பெற்ற மாணவர்களும், சகல முதலுதவி [illegible] அங்கத்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் (ஓ)

# யுத்த முனையில் பணியாற்ற உதவியாளர் உடன் தேவை

## பொது ஸ்தாபனங்களுக்கு அவசர அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யுத்த முனையில் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளுக்கு அங்கு நின்று உதவிகளைச் செய்வதற்கு, பெருமளவு உதவியாளர்கள் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள்.

வட்ட அவை, சிற்றூர் அவை, உற்பத்திக்குழு, சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றில் அங்கம் வகிப்போர் வீடு வீடாகச் சென்று மக்களுடன கலந்துரையாடி இப் பணிக்கு உதவவேண்டும்.

— இவ்வாறு அழைப்பு விடுத்தார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி.

கிராம மட்டத்தில் இயங்கும் பொதுஸ்தாபனங்களுடனான கலந்துரையாடல், நேற்றுக் காலை கோண்டாவில் மக்கள் முன்னணி அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு பேசுகையிலேயே திரு. மூர்ததி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட்ட அவை முதல் விளையாட்டுக் கழகங்கள் வரையான பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.

திரு. மூர்த்தி அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு தமிழ் மகனும் தமது சொந்தப் பிள்ளையின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும்போது எப்படி நித்திரை கொள்ளாது, உணவருந்தாது அவசர அவசரமாக கடமையாற்றிக்கொண்டிருப்பானோ அந்த உணர்வுடன் இப்போர் முடியும் வரை செயற்படவேண்டும்.

நாம் வாழவேண்டுமானால், வீரர்களாகவே வாழ வேண்டும். பயந்தோமானால் சிங்களவனுக்கு அடிமையாகவும், கூலிகளாகவுமே வாழ வேண்டும். பயத்தை மறந்து அனைத்து தமிழர்களும் ஒன்றிணைந்து போராடுவோமானால் அநியாயமான மரணங்களை வென்று விடலாம். விரைவில் சிங்கள இராணுவத்தை துரத்தி எமது இராணுவத்தை எல்லைகளில் காவலில் வைத்திருக்க முடியும், இது உங்கள் கைகளில்தான் உண்டு. வீட்டுக்கொரு பிள்ளையை போருக்கு அனுப்புவோம். போருக்காக உழைப்போம்— என்றார். (அ)

### கடந்த 13 ஆம் திகதி

# ஆனையிறவில் களப்பலியான 46 வீரவேங்கைகள் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலில் கடந்த 13 ஆம் திகதி 46 வீரவேங்கைகள் களப்பலியானார்கள் என்று விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் விவரம் வருமாறு—

1. மன்சூர் (கதிரிப்பிள்ளை-செல்வகுமார்), நாகர்கோவில் வடக்கு.
2. நார்த்தீபன (அழகராசா-புஸ்பராஜா), பருத்தித்துறை.
3. கேசரி (பாலகிருஷ்ணன்-அரசகேசரி), புலோலிமேற்கு.
4. டக்ளஸ் (விக்னேஸ்வரராஜா-சதீஸ்வரன்), மானிப்பாய்.
5. சுரேஸ் (கணேஸ்-புலேந்திரன்), தாளையடி.
6. ஜஸ்ரின் (கிருஷ்ண பிள்ளை-சுதாகர்), அல்வாய் மேற்கு.
7. சசி (சுப்பிரமணிபம்-குமரன்), அல்வாய் கிழக்கு.
8. சரன் (பொன்னம்பலம்-ஜெயக்குமார்), அச்சுவேலி வடக்கு.
9. அகிலன், [சதிர்காமு-பாலச்சந்திரன்], முள்ளியான்
10. அம்பழன (சுந்தரலிங்கம்-ஜெயகாந்தன்], கிரான்
11. பரன் [தியாகராஜா-மோகன்ராஜா], மன்னார்.
12. தனேந்திரன் (துரைசிங்கம் - சிறீகரன்), இளவாலை.
13. நடா (தங்கராசா-பாஸ்கரன்) அம்பாறை.
14. லோகி (வேலாயுதம்-சிவகுமார்), புலோலி தெற்கு.
15. ஜெகன் (நடராசா-தவராசா), பூநகரி.
16. கணேஸ் (இராஜதுரை ஜெயரட்ணம்), முள்ளியவளை.
17. டொனால்ட் [இராமசாமி - புவனகுமார்], கிளிநொச்சி.
18. கஜன் [சின்னையா-சீவரத்தினம்], அளவெட்டி வடக்கு.
19. மஞ்சுதன் [சிவமாலை-குகநேசன்], புளியங்குளம்.
20. குலசிங்கம் [இராசலிங்கம்-றேமன்], மட்டக்களப்பு.
21. காசி [மரியான் ரி-ஞானம்], மாங்குளம்.
22. அங்குதன் [நடராஜா-ராஜ்குமார்], இணுவில் கிழக்கு.
23. மெரடோனா[கைலாசபிள்ளை-[illegible]], [illegible]ணியா.
24. திலகன் [அருணாசலம் -சிவநாதன்], மண்டூர்.
25. மருது [இராமசாமி-மருதலிங்கம்], ஒட்டுசுட்டான்.
26. வரதன்(வாரகன்)[சின்னத்துரை - சர்வகுமார்], அளவெட்டி.
27. யுகந்தன் [நடராசா-பத்மநாதன்], கொக்குத்தொடுவாய்.
28. அப்பன் [ஜோன்-செபஸ்ரா], திருமலை.
29. பிரசாந் [கந்தசாமி-மனோகரன்], மூதூர்.
30. பார்த்தீபன் [டொமினிக்-கெனியூட்], மன்னார்.
31. நாகராசா [முத்துராஜா - நாகராஜா] மாங்குளம்.
32. கீறோ
33. அர்ச்சுனா
34. தமயந்தி [வைத்தியநாதன் - கமலலோஜினி] இலுப்பைக்கடவை.
35. வினோர்சா [சுவாம்பிள்ளை - விஜிதா], பாஷையூர்.
36. தவமலர் [ஈஸ்வரபாதம் – மஞ்சுளாதேவி], மருதங்கேணி வடக்கு.
37. நேதாஜி [சிவஞானம் - விஜயகுமார்], நெடுங்கேணி.
38. நிசா [சின்னத்தம்பி-விஜயகுமாரி], புலோலி தெற்கு.
39. கவி [சீவரட்ணம்-ராஜி], உடுப்பிட்டி.
40. அனோஜா [லோகநாதன் - சிறீகலா], மட்டக்களப்பு.
41. மாலா [யாக்கோப் சில்வா - ரோஸ் மங்கலிப்பா], புத்தளம்.
42. கண்மணி [சறோஜினி -முருகையா], சின்னக்கடை மன்னார்.
43. மீனாட்சி [ராஜரட்ணம் - கலைச்செல்வி], முள்ளியவளை.
44. அமுதப்பிரியா [பரமலிங்கம் - அகிலகுமாரி], புங்குடுதீவு.
45. பூபாலினி [நாகரத்தினம்- பரமேஸ்வரி], முல்லைத்தீவு.
46. குயின்சி [தர்மராசா - தயாநிதி], வட்டுக்கோட்டை.

### ராஜீவ் கொலை தொடர்பாக

# மதுரை அகதி முகாமில் இரு ஈழத் தமிழர்கள் கைது

சென்னை, ஜூலை 23

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மதுரையில் அகதிகள் முகாம் ஒன்றில் தங்கியிருந்த இரண்டு ஈழத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ராஜீவ் கொலை தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள விஜயன் என்ற இலங்கைத் தமிழரின் உறவினர்களே அவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

# எம். எல். ஏக்களைக் கடத்த ஈழப் போராளிகள் முயற்சி?

## காங்கிரஸ் தலைவர் கூறுகிறார்

சென்னை, ஜூலை 23

தமிழக் கடலோரப் பகுதி எம், எல். ஏக்கள் கடத்திச் செல்லப்படுவர் என்று எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாக தமிழ் நாடு சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

எம். எல். ஏக்களுக்கு தீவிர பாதுகாப்பு வழங்க அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கும் படியும் அவர் கோரியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள தமது உறுப்பினர்களை விடுவிக்கக்கோரியே ஈழப் போராளிகள் இக்கடத்தலை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் திரு. பாலசுப்பிரமணியம் கூறினார்.

கரையோரப் பகுதி எம்.எல். ஏக்கள் சிலருக்கு அவர்களைக் கடத்துவது பற்றிய எச்சரிக்கைக் கடிதங்கள் ஈழப் போராளிகளிடமிருந்து கிடைத்துள்ளன என்றும் திரு. பாலசுப்பிரமணியம் கூறினார்.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்தாக்குதல்கள் புலிகள் நடத்தலாம்!

## ஸ்ரீலங்கா அரசுக்கு புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

மணிலா, ஜூலை 23
தமிழீழ விடுதலைப் புலிகளும் வான் வழித் தாக்குதல்களை நடத்தக் கூடும். அதன் முன்னோடியாக ஒரு விமானத்தைத் தயாரித்து சண்டையில் ஈடுபடுத்தும் முயற்சியில் அவர்கள் வெற்றி அடைந்திருக்கலாம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா புலனாய்வுத் துறை ஸ்ரீலங்கா அரசுக்கும் விமானப்படைக்கும் எச்சரிக்கை முன்அறிவிப்பு கொடுத்துள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

தூர கிழக்கு ஒலிபரப்புக் கழகம் நேற்று முன்தினம் இரவு தனது ஒலிபரப்பில் இந்தச் செய்தியை ஒலிபரப்பியிருக்கிறது.

இந்தியப் படையினரின் வருகைக்கு முன்பதாக விடுதலைப் புலிகள் ஒரு விமானத்தைத் தயாரிக்கும் கட்டமைப்பு வேலைகளில் ஈடுபட்டு வந்தார்கள் என்பது தெரிந்ததே. அப்போது ஏற்பட்ட அனுபவங்களைத் தொடர்ந்து தற்போது புலிகள் தமது முயற்சியில் வெற்றி பெற்றிருக்கக்கூடுமென அந்த ஒலிபரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

## போராளிகள் நலம் பெற விசேட பூசை, வழிபாடுகள்

ஆனையிறவு, வெற்றிலைக்கேணி யுத்த முனைகளில் எதிரியுடன் திரமுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் போராளிகளுக்கு ஆத்மபலம் கிடைக்கவும்—

வீரமரணம் அடைந்த வேங்கைகளுக்கு ஆத்மசாந்தி வேண்டியும்—

காயமடைந்த போராளிகள் நலம் பெற வேண்டி பிரார்த்தனை நடத்தவும்—

குடாநாட்டில் பல ஆலயங்களிலும் விசேட பூசை, வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில்—

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கும்—

கந்தர்மடம் ஆத்திசூடி சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று மாலையும்—

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை 5 மணிக்கும்—

விசேட பூசை, வழிபாடு, கூட்டுப்பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளன. [ஒ-31]

## சீ - பிளேன் வேட்டு!

நேற்றுக் காலை தீவுப்பகுதியைச் சுற்றிச் சுற்றி நோட்டமிட்ட சீ - பிளேன் புங்குடுதீவு - குறிகட்டுவான் கரையோரப் பகுதிகளில் வேட்டுக்களைத் தீர்த்தது. [ஒ-111]

## மாணவர் உதவி

போராளிகளுக்கு உதவுமுகமாக யாழ். மத்திய கல்லூரியிலிருந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சாக்குகளும், உரப்பைகளும் மற்றும் மண்வெட்டி உட்பட சுமார் 50 சாதனங்களும், 2 மூடை சணல் கயிறும் சேகரித்து வழங்கப்பட்டுள்ளன. [இ]

## மரண அறிவித்தல்கள்

### காங்கேசம்பிள்ளை கனகசிங்கம்

**[முன்னைநாள் இரத்தினம் அரிசி ஆலை உரிமையாளர்]**

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த காங்கேசம்பிள்ளை கனகசிங்கம் 21-7-1991 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காங்கேசம்பிள்ளை ஞானம்மா தம்பதியின் அன்பு மகனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும், இரத்தினமாலா [கனடா], வசந்தமாலா, இரத்தினகுமார் [சுவிஸ்], புஸ்பமாலா [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாதன் [கனடா], குகதாசசிங்கம் [J. K. ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கல்முனை], சத்தியவதி, செல்வகுமார் [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், நித்தியா, ஆதவன், ஆதித்தன், ஆர்த்தி, அர்ச்சனா, அபிரா, அருள்மாசன், சதீன்குமார், பிரவீன் ஆகியோரின் அன்பு பாட்டனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராஜகோபால் [இளைப்பாறிய பொலிஸ்சார்ஜன்ட்], காலஞ்சென்ற சோதியானந்தம், ஜானகி தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வ. தம்பிராசா [ஆசிரியர்], பொலிகண்டி திக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களாகிய கனகம்மா, சிவபாக்கியம், மணிமேகலை, முத்தம்மா [ஆசிரியை] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 22-7-91 இல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. சிவநாதன்
[மருமகன்]

இமையாணன்,
உடுப்பிட்டி. (17586)

### அப்புத்துரை தவபாக்கியம்

வீமன்காமத்தைச் சேர்ந்த அப்புத்துரை தவபாக்கியம் 22 - 07 - 1991 இல் காலமாகி விட்டார். இவர் அப்புத்துரையின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி [கோப்பாய்] விக்கினேஸ்வரன் [டென்மார்க்], ஞானேஸ்வரி [ஆசிரியை, யூனியன் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயரட்ணம், [டயானி எலெக்ரிகல்ஸ் / மகவர் காப்புறுதி கூட்டுத்தாபனம்], விமலாதேவி [டென்மார்க்] வசந்தகுமார் [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23 - 07 - 1991 10 மணியளவில் மாரியம்மன் லேன், திருநெல்வேலி தெற்கில் உள்ள அவரது சகோதரன் காலஞ்சென்ற குணநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
சு. அப்புத்துரை (கணவர்)

மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி தெற்கு. [17587]

## வவுனியாவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் தாக்குதல் நடத்தினர். அதை அடுத்து அவர்கள் பின்வாங்கி முகாமைச் சென்றடைந்தனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

- ★ 303 ரகத் துப்பாக்கிகள்-04
- ★ அவற்றிற்குரிய மகஸின் -04
- ★ ரி. 56 ரகத் துப்பாக்கி-01
- ★ ரி.56-2 ரகத் துப்பாக்கி-01
- ★ அதற்குரிய ரவைக் கூடுகள்-10
- ★ ஆர். பி. ஜி. -01
- ★ அதற்குரிய ஷெல்கள் -06
- ★ புறொப்ளர் -06
- ★ ஜே. ஆர். ரக கிரனேட்-02
- ★ நடுத்தர ரவைகள்-4,625
- ÷ 303 ரக ரவைகள் 747

(ஒ-3)

## படையினரின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றது.

படையினரின் சடலங்களை அரசிடம் ஒப்படைக்க தாங்கள் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த விடயம் குறித்து செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் கொழும்பில் ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டதாகத் தெரியவந்தது.

## நேற்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றும் ஹெலிகள் மாறி மாறி பலத்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருந்ததாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சில பகுதிகளில் எரிகுண்டு வீச்சும் இடம்பெற்றதாகத் தெரியவந்தது. (உ-3)

## 17 பேரின் புகழுடல்களுக்கு பண்டத்தரிப்பில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 23
வெற்றிலைக்கேணி அருகே ஞாயிறு இரவு படையினரை திக்குமுக்காடச் செய்து சிதறி ஓட வைத்த வெற்றிகரத் தாக்குதலில் களப் பலியான 28 வேங்கைகளில் 17 பேரின் புகழுடல்கள் நேற்று மாலை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இந்த வீர வேங்கைகளுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அங்கு அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

தமிழ் மண்ணுக்காக உயிர் நீத்த வேங்கைகளின் புகழுடல்கள் பின்னர் கோப்பாய் மாவீரர் துயில் கொள்ளும் புனித இடத்தில் தீயுடன் சங்கமமாகின. (ஒ)

## சகல தபால் நிலையங்களும் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தபால் நிலையங்களும், உப தபால் நிலையங்களும் இன்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் வழமை போல இயங்கவுள்ளன.

நேற்று யாழ் பிரதம தபால் நிலையத்தில் நடந்த தபால் உத்தியோகத்தர்களின் கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

காலை 8 மணிமுதல் மாலை நான்கு மணி வரையும் மக்கள் சேவைக்காகத் திறந்து வைத்து கருமங்களை ஆற்றுமாறு சகல தபால் மற்றும் உப தபால் அதிபர்களை யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ச. சடாட்சரநாதன் கேட்டுள்ளார்.

இதேவேளை —

பருத்தித்துறை துறைமுகத்திற்குக் கடைசியாக வந்து திரும்பிய கப்பலில் இருந்து இறக்கப்பட்டு பருத்தித்துறையில் தேங்கிக் கிடக்கும் 123 தபால் பொதிகளையும், சம்பந்தப்பட்ட தபால் அதிபர்களே நேரடியாக அங்கு சென்று, எடுத்து வந்து விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

வழமைபோல் செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் அவற்றை எடுத்து வருவதில் காலதாமதம் ஏற்படுவதனாலேயே இந்த அவசர ஏற்பாடு செய்யப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## 18 மீனவரையும் விடுவிக்க மாலைதீவு அரசு இணங்கியது

மாலே, ஜூலை 23
இலங்கை அரசு கேட்டுக் கொண்டதை அடுத்து மாலைதீவில் சிறை வைக்கப்பட்டுள்ள 18 இலங்கை மீனவர்களை இம்மாத இறுதியில் விடுதலை செய்ய மாலைதீவு அரசு இணங்கியது.

மாலைதீவுக் கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக மீன் பிடித்தபோது அம் மீனவர்கள் மாலைதீவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்—

நீதிமன்ற விசாரணையின் பின்னர் அவர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. (உ-எ)

## கோடிக்கரை சண்முகம் மரணம்:

## இந்திய அரசு மீது குற்றம் காங்கிரஸ் சுமத்துகிறது

புதுடில்லி, ஜூலை 23
ராஜீவ் கொலை தொடர்பான சந்தேக நபர் சண்முகம் மரணமான சம்பவத்திற்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சி, அரசைக் கோரியுள்ளது.

கட்சியின் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

சண்முகத்தின் மரணம் குறித்து அரசு முழு அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று கோரிய காங்கிரஸ் கட்சி, சண்முகம் விஷயத்தில் கவனயீனமாக நடந்து கொண்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

சண்முகம் மரணம் பற்றிய விஷயத்தில் புலனாய்வு அதிகாரிகள் நடந்து கொண்ட அக்கறையற்ற தன்மையை பாரதீய ஜனதாக் கட்சியும் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறது. [உ-எ]

## ராஜீவ் கொலை விசாரணை; சாந்தன் நேற்றுக் கைது

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இன்னொரு முக்கிய சந்தேக நபர் ஒருவரை மத்திய புலனாய்வுக் குழுவினர் நேற்று கைது செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த சந்தேக நபர் மூலம் ஈழப் போராளிகளின் இரகசிய வானொலி சைகை அடையாளங்களை கண்டு பிடிக்கக் கூடியதாக இருந்ததாக மத்திய புலனாய்வு குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாந்தன் எனப்படும் இவர் இன்னும் பல பெயர்களில் செயற்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. இவரிடம் இருந்து டயறி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் —

அந்த டயறி மூலம் ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட இன்னும் சிலரின் விவரங்கள் கிடைத்திருப்பதாகவும் மத்திய புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது.

ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வரும் பிரதான சந்தேக நபர்களான சிவராசன், சுபா ஆகியோருடன் இச்சந்தேக நபர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்றும்—

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா உட்பட 13 பேர் கொலைகளுடனும் இந்த நபர் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் தெரிய வந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஓ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org